பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 13 சனிக்கிழமை 27.01.2024 கதிர் 81

# ஒற்றுமை வேண்டும் என்றால் ஜனநாயக கூட்டணிக்கு வருக

## தமிழ் அரசுக் கட்சிக்கு சுரேஷ் அழைப்பு

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று விரும்பினால் தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வந்து இணைந்துகொள்ளவேண்டும் என்றுஅழைப்புவிடுத்திருக்கிறார் அந்தக் கூட்டணியின் இணைத் தலைவரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராகப் பதவி யேற்றதன் பின்னர் சிவஞானம் சிறிதரன் ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியராகிய நாம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும் 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத்தெரிவானதுமேதமிழ்த் தேசியத்தின் ஒற்றுமைக்காகத் தொடர்ந்தும் பாடுபடுவேன் என்றும் அதற்காக 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலையைகூட்டமைப்புஎட்டுவதற்காக மீண்டும்அனைவரும்ஒன்றிணைய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அவர் இந்த அழைப்பை விடுத்திருந்தார். இன்னும் சொல்லப் போனால் கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னராகவே அவரது அழைப்பு அறிக்கைவடிவில்வந்திருந்தது. 2

## பெப். 15 முதல் மேலும் 120 வோல்ட் மின்சாரம்

### தேசிய வலையமைப்பில் இணைப்பு

உமாஓயா திட்டத்தின் கீழ் பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 120 மெகாவோல்ட் மின்சாரத்தைதேசியமின்கட்டமைப்பில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: உணவு உற்பத்தியை 11

## தேசிய பொருளாதாரக் கொள்கையை தெளிவுபடுத்தவே சபை ஒத்திவைப்பு

### இப்படி விளக்கம் கொடுக்கிறார் வஜிர

தேசிய பொருளாதாரக் கொள்கையை தெளிவுபடுத்தவே நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து அதன் புதிய கூட்டத்தொடர்தொடக்கத்தின்போது ஜனாதிபதி உரையாற்றவுள்ளார் ஷ என்று ஐக்கியதேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுறுத்தப்பட்டமை சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: 2

## நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்து மேற்கு நாட்டு தூதர்கள் கரிசனை

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைச் சட்டம் தொடர்பில் பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன.

இலங்கைக்காக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பற்றிக் இது தொடர்பில் தெரிவிக்கையில், "நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பான நாடாளுமன்றநடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தேன். கருத்துச் சுதந்திரம் மற்றும் இலங்கையின்பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கம் குறித்து சிவில் சமூகம் மற்றும் தொழில்துறை கவலைகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இரண்டையும் பாதுகாக்கும் வகையில் இச்சட்டமூலம் செயல்படுத்தப்படுவது முக்கியமாகும்" என்றார்.

இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தனிகர் எரிக்வொல்ஸ் தெரிவிக்கையில், "இலங்கையின் நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும் என்பதோடு ஜனநாயக சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நியாயமான உரையாடலைக் கட்டுப்படுத்தும் 11

## கட்டுநாயக்க அதிவேக சாலையில் நேற்றும் விபத்து: ஒருவர் இறப்பு

### மேலும் நால்வர் காயம்

கட்டுநாயக்கஅதிவேக வீதியின் கடவத்த மற்றும் கெரவலப்பிட்டிய பகுதிகளுக்கு இடையே நேற்றும் வாகன விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

காலை 7 மணியளவில்லொறியொன்றின் பின்புறத்தில்வானொன்று மோதியதில்இந்தவிபத்து இடம்பெற்றதோடு,குறித்த வானில் பயணித்த ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த 37 11

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தை உடன் சபாநாயகர் சான்றுப்படுத்தக்கூடாது

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச்சட்டத்தை சபாநாயகர் சான்றுரைப் படுத்தக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாதெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைச் சட்டமூலம் சம்பந்தமாக பெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆகவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இந்தச் சட்டமூலத்தினைசான்றுரைப்படுத் தக்கூடாது.

அதுமட்டுமன்றி, கட்சித் தலைவர்களை உடனடியாக அழைத்து இந்தச் சட்டமூலம் சம்பந்தமாக மீளாய்வு நடத்த வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

இந்தச்செயற்பாட்டை சபாநாயகர் கைவிட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பாராக இருந்தால் அது பெரும் பிரச்சினைகளை உருவாக்கும். அதன் மூலம்ஜனநாயகத்திற்கு சாவுமணியே அடிக்கப்படும் என்றார்.

நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டாலும் அதில் சபாநாயகர்கையெ 2

## பயங்கரவாத சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீது ஜனவரி 31 விசாரணை

### இரு நாள்கள் தொடர்ந்து இடம்பெறும்

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள புதியபயங்கரவாதஎதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான மேலதிக விசாரணையைஜனவரி 31 மற்றும் பெப்ரவரி முதலாம் திகதிகளில் முன்னெடுப்பதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் 11

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 7 நாடாளுமன்றம் 2

## ஊடக அடக்குமுறையை எதிர்த்து யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்




ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரான ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில்நேற்றுஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டம் என்பன 2

## கொழும்பு கோட்டையில் கையெழுத்து போராட்டம்

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டு கொழும்பு கோட்டை தொடருந்துநிலையத்தில் கையெழுத்துப் போராட்டம் நேற்றுத் தொடங்கப்பட்டது.

இந்தக்கையெழுத்து வேட்டையில் சிவில் அமைப்பினர், பொது மக்கள், சமயத் தலைவர்கள் என்று பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கையொப்பங்களின் ஊடாக பொதுமக்களின் நிலைப்பாட்டை ஆட்சியாளர்களுக்கு வெளிப்படுத்துவதே 11

## நாணய நிதியத்துடன் உரையாட வரும்படி கட்சித் தலைவர்களுக்கு ரணில் அழைப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் அழைப்புவிடுத்துள்ளார்.

அத்துடன், தேர்தலுக்குத் தயாராகும் பட்சத்தில் நாட்டை 2

### யாழ், திருநெல்வேலி நகரப்புற

## கடைகள் மீதும் இனி டெங்கு சட்டம் பாயும்

### யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு

நுளம்புபெருகக்கூடிய சூழலை வைத்திருக்கும் கடைஉரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் மீது இனிமேல் சட்ட நடவடிக்கை பாயும் என்று யாழ். மாவட்டச் செயலர்சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். அதற்கான 11

## இனி இது .....

திருகோணமலையில் ஜனவரி 21 நடந்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் சிறீதரன் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டாராயினும்நாளைதிருகோண மலையில்நடக்கஇருக்கும்கட்சியின் தேசிய மாநாட்டில்தான் அவர் தலைவராக உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ளார். அதற்கிடையில், அவசர அவசரமாக தேசிய ஒற்றுமைக்கான அவரது அழைப்பு வந்திருந்தது.

கட்சித் தலைவரானதுமே அவர் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தனது வணக்கத்தைச் செலுத்தியிருந்தார். தனது அரசியல் பயணத்தை அவர் அங்கிருந்து தொடங்கினார் என்று இது பரப்புரை செய்யப்பட்டது. குறிப்பாகப் புலம் பெயர் தமிழ் ஊடகங்களால் இந்தப் பரப்புரை கட்டவிழ்க்கப்பட்டது. ஆனால், அவர் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்த முன்பாக, கட்சித் தலைவரானதுமே கிழக்கில் உள்ள இருஆலயங்களுக்குச்சென்றுகடவுளர்களுக்குத்தான் வணக்கமும் நன்றியும் செலுத்தினார்.

பக்திமானான சிறீதரன் முதலில் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் பின்னர் காளி கோயிலுக்கும் சென்று வணங்கி, ஆசி பெற்றிருந்தார். அதன் பின்னர் கிளிநொச்சிக்குத் திரும்பியே அவர் மாவீரர் துயிலும் இல்லத்தில் வணக்கம் செலுத்தியிருந்தார். அவர் தனது அரசியல் பயணத்தை துயிலும் இல்லத்தில் இருந்தே தொடங்குவதாக இருந்திருந்தால் கிழக்கிலேயே மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று வணக்கம் செலுத்தியபின்னர்ஆலயங்களுக்குச் சென்றிருப்பார். கிளிநொச்சிதிரும்பும் வரை காத்திருந்திருக்கும் அவசியம் எதுவும் இருக்கவில்லை. எனவே மிகைப்படுத்தல்கள், உணர்ச்சியூட்டல்கள் மூலம் அவரது அரசியல் பயணம் அர்த்தப்படுத்தப்பட்டு சிக்கல்கள் வருந்தி அழைக்கப்படுவதிலிருந்து அவர் விலகியிருப்பது அவசியம்.

இந்தப் புலம்பெயர் தூண்டல் துலக்கல் மூலம்தான் அவர் தேசிய ஒற்றுமைய பற்றிய ஓர் அறிக்கையையும் அவசரமாக வெளியிட வேண்டியவரானார் என்று தெரிகின்றது. தலைவரானதும் புலம்பெயர் ஊடகம் ஒன்றுக்கு மட்டுமே நேர்காணல் வழங்கியிருந்தார். உள்ளூர் ஊடகங்கள் எவற்றுக்கும் நேர்காணல் வழங்கவில்லை. அது ஒரு சர்ச்சையாக எழுவதைத்தவிர்ப்பதற்காகவே தனது நேர்காணலில் தான் சொல்லிய விடயங்களை சாராம்சப்படுத்தி ஒரு ஊடக அறிக்கையாக அவரால் வெளியிடப்பட்டது என்றே அறிய முடிகின்றது.

இருந்தாலும் அவரது அவசரம் இப்போது அவரைச் சிக்கலில் மாட்டி வைத்துள்ளது. அவர் தமிழ் அரசுக்கட்சியின் தலைமையிலான கூட்டமைப்புக்கு எல்லோரும் திரும்பவேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், ஒற்றுமை வேண்டுமானால் தமிழ் அரசுக் கட்சி வந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணைந்துகொள்ள வேண்டும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று அறிக்கைவிட்டுள்ளார். இதுஒன்றும் புதிய விடயமல்ல, கூட்டமைப்பு உடைந்து அதிலிருந்த ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் மேலும் மூன்று தரப்புக்களை உள்ளடக்கி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை உருவாக்கியபோதே, இனி நாங்கள்தான் கூட்டமைப்பு, இதில் யார் வேண்டுமானாலும் வந்து இணைந்து கொள்ளலாம் என்றே அறிவிக்கப்பட்டது.

இன்றும்கூட தமது அணியை சுரேஷ் பிரேமச்சந்திரன்தான் உத்தியோகபூர்வமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று அழைத்துக் கொண்டிருக்கிறார். ரெலோ மற்றும் புளொட் ஆகியன தம்மைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றே சொல்லிக் கொண்டிருக்கின்றன. அவை தங்களை ஜனநாயகக் கூட்டணி என்று அழைத்துக்கொள்வதில்லை. அவற்றைப் பொறுத்தவரையில் தாமே கூட்டமைப்பு, தமிழ் அரசுக் கட்சி வேண்டுமானால் தம்மோடு வந்து இணைந்து கொள்ளலாம் என்பதே நிலைப்பாடு. அதனையே சுரேஷ் பிரேமச்சந்திரனின் அறிக்கையும் தெளிவுபடுத்துகின்றது.

ஒற்றுமை என்ற பெயரில் ஏனையகட்சிகளின்கீழ்தமிழ்அரசுக் கட்சி செல்வதை அந்தக் கட்சியின் அரசியல் மற்றும் பொதுக் குழுக்கள் ஏற்றுக்கொள்ளும்நிலைமைஇருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவும் கூட்டமைப்பு என்று மூன்று கட்சியாக இருந்தபோதே தேர்தலில் ஆசனப் பங்கீட்டில் தனக்கே பெரும்பான்மையான ஒதுக்கீடு வேண்டும் என்றும் அடம் பிடிக்கக்கூடிய தமிழ் அரசுக் கட்சியினர், இப்போது 5 கட்சிகளுடன் ஆசனங்களைப்பங்கிடுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. எனவே தனது தலைமைத்துவ வகிபாகத்தைவிட்டுக்கொடுத்துவிட்டு ஜனநாயகக் கூட்டணியில் தமிழ் அரசுக் கட்சி ஐக்கியமாவதற்கான சாத்தியங்கள் குறைவு என்றே நான் கருதுகின்றேன்.

இவைஎல்லாம்குறித்தும்நாளை ஞாயிற்றுக்கிழமைதனது கொள்கை விளக்க உரை மற்றும் தேசிய தீர்மானங்களின் மூலம் சிறீதரன் விளக்குவார், விளக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். தலைவராகத் தனது நேர்காணலில் தமிழ்த் தேசியத்திற்காகவும் ஒற்றுமைக்காகவும் எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் தான் தயாராக இருக்கின்றார் என்று அவர் அறிவித்திருந்தார்.

''தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக, 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ்த் தேசியவாத சக்திகளின் அணிதிரட்டலை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், தலைமைப் போட்டி அல்லது போட்டி என்ற எதிர்பார்ப்பின்றிஅனைவரையும்ஒன்றிணைப்பதற்கும் என்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன். அப்போதுதான் தமிழ் மக்களின் உரிமைகளைவென்றெடுப்பதற்கான சரியான பாதையில் பயணிக்கமுடியும்.

தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கும் பயணத்தில் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு தியாக உணர்வோடு உழைக்க வேண்டும். அதற்காக எத்தனை விட்டுக்கொடுப்புகளையும் தியாகங்களையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்'' என்று அவர் அந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

அது உண்மைஎன்றால்சுரேஷ் பிரேமச்சந்திரனின் அழைப்பை ஏற்றுதமிழ்அரசுக்கட்சிஜனநாயகக் கூட்டணியில்சங்கமமாகவேண்டும். அவரதுகட்சிஅதற்குஅனுமதிக்குமா? சிறீதரனின்தேசியஒற்றுமைக்கான வழிவரைபடம்என்னஎன்பவற்றை அறிந்து கொள்ள நாளை வரை காத்திருப்போம்...

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஒற்றுமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்வேண்டுகிறோம்எனசுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின்சார்பில்இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அந்த அறிக்கையில், தமிழ் அரசுக்கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறிதரனுக்கு ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தந்தை செல்வாவினால் தொடங்கப்பட்டு, இராஜவரோதயம், ராசமாணிக்கம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோரால் தலைமை தாங்கப்பட்டு, தமிழ் மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பாரம்பரியமிக்க ஒரு கட்சியின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழரசுக் கட்சி தனித்து நின்று, தனது கோரிக்கைகளை வெல்ல முடியவில்லைஎன்றகாரணத்தினால் அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ், இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் இணைந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கிய பாரம்பரியமும் தந்தை செல்வா தலைமையிலேயே நடைபெற்றது.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 1976ஆம் ஆண்டிலிருந்து தனது கட்சியான தமிழ் அரசுக் கட்சியை முன்னிலைப்படுத்தாமல், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஓர் ஐக்கிய முன்னணி என்பதை தந்தை செல்வா அடையாளம் காட்டினார்.

அதன் பின்னர், 1985ஆம் ஆண்டில் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியன இணைந்து திம்பு கோட்பாடு எனப்படும் நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்தனர். அதுவே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் தீர்விற்கான அடைப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

2002ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஎன்றபெயரில் செயற்பட்டு வந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதப் போராளிகளாகச் செயற்பட்டவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழிமுறையில்தமிழ்மக்களுக்கான உரிமைகளைவென்றெடுப்பதற்கான போராட்டத்தினை முன்னெடுத்திருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரணை யுடன் செயற்பட்டு வந்தார்கள்.

சம்பந்தனால்தலைமையேற்று நடத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்நிலவியபல்வேறு முரண்பாடுகள் காரணமாக அதில் இணைந்திருந்த பல கட்சிகளும் தனிநபர்களும் வெளியேறியது மாத்திரமல்லாமல், 2023ஆம் ஆண்டு நடைபெற இருந்த உள்ளுராட்சித் தேர்தல்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தாங்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற காரணத்திற்காக கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்கள். அதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செயலிழந்தது.

இந்த நிலையில் ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் ஆகியோர் இணைந்து ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான ஒரு யாப்போ அமைப்பு வடிவமோ இல்லாத காரணத்தால் கூட்டமைப்பிற்குள் பல்வேறு முரண்பாடுகள் அவ்வப்போது தோற்றம் பெற்றிருந்தன.

இவற்றை நிவர்த்தி செய்யும்பொருட்டு, நாம் உருவாக்கிய ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்காக ஒரு யாப்புவரையப் பட்டிருக்கின்றது. அது தேர்தல் ஆணையத்தில்பதிவுசெய்யப்பட்டும் இருக்கின்றது. இந்தக் கூட்டணிக்கென்று குத்துவிளக்கு சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளது. .இந்த ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி, யாப்பின் அடிப்படையில் நிறைவேற்றுக்குழுவும் கட்சிக்கான கட்டமைப்பும்உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காலத்தின் தேவை கருதி, 2002ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடங்கப்பட்டபோதும் அதனைப் பதிவுசெய்யவேண்டும்என்றுஅதில் அங்கம் வகித்த பல்வேறு கட்சிகள் தொடர்ந்தும் கோரிக்கைகளை வைத்தபோதும் தமிழ் அரசுக் கட்சி அதற்குச் செவிசாய்க்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 வருட காலமாக தமிழ் மக்களுக்காகப் போராடும் ஒரு அரசியல் கட்சியாக தன்னை நிறுவனப்படுத்திக்கொள்ளாமல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் தமிழ் அரசுக் கட்சி தனியாகவும் முடிவெடுத்துச் செயற்படுவதுமே இன்றுவரை தொடர்கின்றது. இதன் காரணமாகவே இடைப்பட்ட காலங்களில் பல கட்சிகளும் அதிலிருந்து வெளியேறின.

இந்தநிலையில்புதிதாகத்தெரிவு செய்யப்பட்டிருக்கும்கட்சித்தலைவர் சிவஞானம் சிறிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோர் மீண்டும் ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார். ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும்ஒருவலுவானஅமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றது.

இதன் அடிப்படையில்தான் ஒரு வருடத்திற்கு முன்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உருவாக்கப்பட்டு, அது இன்றுவரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறானஒருசூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, ஏற்கனவே செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஐக்கிய முன்னணியில்தமிழ்அரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகிறோம் - என்றுள்ளது.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசநாணயநிதியத்துடன் கடந்த ஏழுமாதங்களாக ஏற்படுத்திக்கொண்ட இணக்கப் பாடுகள்மற்றும்கலந்துரையாடல்கள் மூலம் பொருளாதார மாற்றமும் அதற்கான இறுதி இலக்கும் எட்டப்பட்டுள்ளது.

அது தொடர்பான தேசிய கொள்கைக்கட்டமைப்பைமீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெளிவு படுத்த வேண்டியுள்ளது. புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து உரையாற்றுவதும், நாட்டு மக்களுக்கு பொருளாதாரக் கொள்கையைத் தெளிவுபடுத்துவம் மிகவும் முக்கியமனாது என்பதே எமதுநிலைப்பாடாகும். அதற்காகவே நாடாளுமன்றம்ஒத்திவைக்கப்பட்டது என்றார்.

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன..

யாழ்.பொது நூலகத்தில் இருந்து புறப்பட்ட ஊடகம் யாழ். மத்திய பேருந்து நிலையம் வரையில் சென்றது. அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடகஅமைப்புக்களின்பங்கேற்புடன் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டசிலர்இந்தப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்திட்டதன்பின்னரே அந்தச்சட்டம் நடைமுறைக்கு வரும் என்பதால் ஹர்ஷன இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பில்திட்டமொன்றுஅனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சர்வதேச சுங்க தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத் திணைக்களம் இலங்கையின் பழமையான அரச திணைக்களங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர் பழைய மாந்தை துறைமுகத்தில் சுங்க வரி அறவிடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே அன்றிலிருந்து அனுராதபுர காலத்திலும், கோட்டே காலத்திலும், கண்டி காலம் முதல் இன்று வரை இந்த நாட்டின் இருப்புக்கு சுங்க வருமானம் பெருமளவில் பங்களித்துள்ளது.

2022 இல் நாம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதற்கு சுங்கத் திணைக்களம்ஆற்றியபங்களிப்புக்கு நன்றி கூற வேண்டும். சுங்க வரி, வற் வரி மற்றும் வருமான வரி ஆகியவை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் மூன்று முக்கிய வருமான மூலங்களாக உள்ளன. இன்று சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள், பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற அனைத்தின்மூலமும்,நாம்எவ்வாறு வருமானத்தைஅதிகரிப்பதுஎன்பதில் கவனம்செலுத்தவேண்டும். அதற்கு தற்போதைய சுங்கச் சேவைகள் திறம்பட செயல்பட வேண்டும்.

சுங்கத் திணைக்களத்திற்கு கூடுதல் பணியாளர்களை வழங்க முடியாவிட்டாலும், செயல்திறன் ஊடாக எந்தளவு வருமானத்தை அதிகரித்துள்ளமை சிறப்புக்குரியது. நாம் இன்னும் வெகுதூரம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், விரைவில் நாம் கொண்டு வரவிருக்கும் புதிய சட்டத்தின் ஊடாக சுங்கம் மற்றும் ஏனைய வருமானத் திணைக்களங்களை முழுமையாக நவீனமயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இது என்பதைக் கூற வேண்டும். 2022இல் பொருளாதாரம் வீழ்ந்தது. எனினும், 2023இல் நாம் எடுத்த முடிவுகளினால் அந்த வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கான வழி ஏற்பட்டது. ஆனால், அது இன்னும் முடியவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டின்வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12மூ ஆக்குவோம். 2026இல் அதனை 15மூஆக அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

எனவே தற்போதைய பொருளாதாரத்தில் இருந்து வருமானம் ஈட்ட வேண்டும். வருமானத்தை அதிகரிக்க, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைவது என்ற கேள்வியை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். பழைய பொருளாதார முறையால் நாட்டை முன்னேற்ற முடியாது. ஒவ்வொரு நாளும்கடன்வாங்குவதால்நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. இந்த பொருளாதார முறையை மாற்ற வேண்டும்.

நாம் இன்னும் கடினமான காலத்திலேயே இருக்கிறோம். 2021இல்எங்களிடம்அத்தியாவசிய பொருட்கள் இருக்கவில்லை. எம்மிடம் உரம், எரிபொருள் இருக்கவில்லை. ஆனால் இன்று அவை உள்ளன. அதற்கு பணம் வழங்கவேண்டும்.ஒவ்வொருவரும் இன்னும் வாழ்க்கைச் சுமையை உணர்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியுடன்இந்தப்பிரச்சினைகள் குறையும். 2022இன்பொருளாதாரச் வீழ்ச்சியில்இருந்துஒரேதடவையில் மீள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அது முடியாது. எனவே நாம் புதிய பொருளாதாரத்திற்குச் செல்ல

தொடர்ச்சி 11ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிடமே உள்ளது

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திட்டவட்டம்

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதல் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படும். வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டு மக்களின் உரிமை வாக்குரிமை ஊடாக உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல் தீர்மானமிக்கது. அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவி காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் நிறைவடையும்.

1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு சட்டத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாதம்,இரு மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

இதற்கமைவாக எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதல் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படும்.

வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும்ஜூலை மாதமளவில் நிறைவடையும் அதனை தொடர்ந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு நான்கு அல்லது நான்கு வாரகாலத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும்.

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தது.நிதி விடுவிப்பு தாமதமானதால் தேர்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது,நீதிமன்றம் எடுக்கும் தீர்மானத்துக்கு உட்பட்டு செயற்படுவோம்.

ஒன்பதாவது பதவி காலம் 2025 ஒகஸ்ட் மாதத்துடன் நிறைவடையும், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நாடாளுமன்றத்தைக் கலைத்து,தேர்தலை நடத்தும் திகதியை ஜனாதிபதி தீர்மானித்தால் அதற்கமைய ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

தேர்தல் முறைமையில் ஏற்பட்டுள்ள சட்டசிக்கலால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

ஆகவே தேர்தல் முறைமை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

இந்த ஆண்டு எந்தத் தேர்தலும் நடத்தப்படலாம். ஜனாதிபதி தேர்தலை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு,பொதுத்தேர்தலை ஜனாதிபதி தீர்மானிக்கலாம், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நீதிமன்றம் தீர்மானிக்கலாம், மாகாண சபைத் தேர்தலை நாடாளுமன்றம் தீர்மானிக்கலாம். ஆகவே இந்த ஆண்டு தீர்மானமிக்கது. - என்றார். (05)

# சனத் நிசாந்தவின் இறப்பு குறித்து சமூக வலைத் தளங்களில் அவதூறு

## விசாரணைகள் ஆரம்பம்

இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் மரணம் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறான கருத்துக்களை வெளியிடுபவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சனத் நிசாந்தவின் மரணம் குறித்து சமூக ஊடகங்களில் எதிர்மறையான பதிவுகள் வெளியாகி வருகின்றன எனவும் அவற்றை அங்கீகரிக்க முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவதூறான கருத்துக்களை வெளியிடுபவர்கள் யார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது தொடர்பாக மேலும் விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார். (05)

# குடாவெல்ல கடலில் குளிக்க சென்ற ஒருவர் உயிரிழப்பு

## மற்றையவர் மாயம்

அம்பாந்தோட்டை, குடாவெல்ல மோதரவத்த கடலில் குளிக்கச்சென்ற ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கடலில் குளிக்கச்சென்றவரில் களுத்துறையைச் சேர்ந்த 35 வயதான ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் கம்புறுப்பிட்டியவைச் சேர்ந்த 25 வயதுடைய ஆணொருவர் காணாமல்போயுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். காணாமல் போனவரைத் தேடும் நடவடிக்கை தொடர்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

5 பேர் அடங்கிய குழுவினர் குறித்த பகுதிக்கு வருகை தந்தனர் எனவும் அதில் மூவர் கடலில் குளிக்கச்சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (05)

# அழகுக்கலை நிபுணரை கத்தியால் குத்தி தங்க நகையைத் திருடிய பெண் கைது!

களுத்துறை, கொனபொல பிரதேசத்தில் அழகுக்கலை நிபுணர் ஒருவரைக் கத்தியால் குத்தி தங்க நகையை திருடிச் சென்றார் எனக் கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அழகுக்கலை நிலையத்துக்கு இளைஞர் ஒருவருடன் அழகுக்கலை நிமித்தம் வந்த பெண் ஒருவர் குறித்த அழகுக்கலை நிபுணரை கத்தியால் குத்தி அவரது கழுத்தில் இருந்த தங்க நகையைத் திருடிச் சென்றுள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட நகையானது 350,000 ரூபா பெறுமதியானது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# விஸ்வ புத்தருக்கு மற்றுமொரு வழக்கிலும் விளக்க மறியல்

விஸ்வ புத்தர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மற்றுமொரு வழக்குக்காக நுகேகொட நீதிவான் நீதிமன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னிலைப்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (05)

# பழம் பறிக்க ஏறியவர் கீழே வீழ்ந்து உயிரிழப்பு


*பழம் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நபர் மரக்கிளையுடன் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*பெல்மடுல்ல சிங்கபுர பிரதேசத்தை சேரந்த 66 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .*

*மரத்தில் இருந்து கீழே விழுந்தவரை அயலவர்கள் கஹவத்தை போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் .*

*இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (05)*






# யாழ்ப்பாணத்து வருகையை வரவேற்கும் வல்வை வளைவு

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி செல்லும் வீதியில் 'யாழ்.வல்வை வளைவு' வலிகாமத்தை வடமராட்சியில் இருந்து பிரித்து இரு இடங்களையும் எல்லைப்படுத்துகின்றது.

மேலும், வடமராட்சிக்கு வருவோரை யாழ்.வல்வை வளைவு வரவேற்று நிற்கின்றது.

ஏ9 வீதி வழியே யாழ்ப்பாணம் செல்லும் போது யாழ்.வளைவு நம்மை வரவேற்பதை இது நினைவுபடுத்துகின்றது என சுற்றுலாப் பயணிகள் பலர் குறிப்பிடுகின்றனர்.

நகரங்களுக்குள் நுழையும் போது வீதிகளில் உள்ள வரவேற்பு வளைவுகள் மக்கள் மனங்களில் ஆழமான மனப்பதிவுகளை ஏற்படுத்துகின்றன.

மக்களின் மனங்களிலும் மண் பற்றின் அடையாளமாக வளைவுகளின் நினைவுகள் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வீதி வளைவுகளில் தமிழர் பண்பாட்டியல் மேலோங்கி இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. வளைவுகளில் தமிழ் வாசகங்களைப் பதிவிடுவது மகிழ்வுக்குரிய செயற்பாடு என தமிழாசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத் தமிழ் பாரம்பரியம் பற்றி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணிக்கையில் ஏபி20 வீதி வழியில் 20 ஆவது கிலோமீற்றர் கல்லை கடந்து செல்லும் போது வல்வை வளைவை எதிர்கொண்டு பயணிக்க நேரிடும்.

வீதியின் ஒரு பக்கத்தில் மட்டும் நிறுவப்பட்டுள்ள இந்த வளைவு தமிழியல்பை கொண்டு காட்சியளிக்கின்றது.

காட்சித் தோற்றத்தில் பிரமிப்பை ஏற்படுத்தி ஆனந்தத்தை பெருக்கி மகிழ்வை ஊற்றெடுக்க வைத்து விடுகின்றது.

சூரியன், பனைமரம், ஔவையாரின் 'வரப்புயர நீர் உயரும் ' என்ற வாசகமும் இருக்கின்றது. மேலும், வளைவின் நிறமும் கடல்சார் நீலநிறமாக இருக்கின்றது.

வரப்புயர நீர் உயரும் என்ற வாசகம் தமிழ் இலக்கிய வாசனையை ஏற்படுத்தி விடுகின்றது. அதியமான் என்ற பாண்டிய மன்னனை வாழ்த்திப் பாடுவதற்கு தமிழ் புலவர் ஔவையாரால் 'வரப்புயர நீர் உயரும்' என்ற பாடல் பாடப்பட்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

வானுயர வளரும் பனையினையும் குறியீடாக கொண்டு வல்வை வளைவு அமைந்துள்ளது. வளைவைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் பனை வளத்தை அது நினைவுபடுத்துகின்றது.

வளைவின் தூணுடன் இணைக்கப்பட்ட சுவரின் முன்பக்கத்தில் 'உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். வடமராட்சி மக்கள்' எனவும் 'நன்றி.மீண்டும் வருக. வடமராட்சி மக்கள்' என பின் பக்கத்திலும் குறிக்கப்பட்டு இருப்பதையும் இங்கே சுட்டிக்காட்டல் பொருத்தமானதாகும்.

யாழ்.வல்வை வளைவையிட்டு கருத்திடும் மக்களிடையே அதனைப் பாராட்டிப் புகழுதலை அவதானிக்க முடிகின்றது.

யாழ்.வல்வை வளைவின் மீதான அவதானிப்புக்கள் பல செயற்பாட்டு விடயங்களில் நம்மை கவனமெடுக்கச் செய்து விடுகின்றது என யாழ் வடமராட்சியைச் சேர்ந்த கல்விப் புலமையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

வரவேற்பு வளைவுகள் எப்போதும் மகிழ்ச்சிக்குரியவையாகவே இருக்கின்றன. வருவோரை வரவேற்கும் தமிழரின் உயர்ந்த பண்பாட்டை அவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

யாழ். வல்வை வளைவின் முன் பின் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள குறிப்பில் விடைபெறுவதற்கான வாசகங்களும் வரவேற்பு வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன.

இது மகிழ்ச்சியை ஏற்படுத்திய போதும் வளைவைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள நிலத்தினை அழகுபடுத்தியிருக்கலாம் என்பதும் சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

வளைவில் சிலையாக இருக்கும் பனை மரத்தினை கருத்திலெடுத்து யாழ்.வல்வை வரவேற்பு வளைவினைச் சூழ வீதியின் இரு பக்கங்களிலும் பனைமரங்களை நாட்டி பனைமரச் சோலையாக அந்த இடத்தினை மாற்றியிருக்கலாம் என்ற ஆதங்கமும் பயணிகள் சிலரால் வெளியிடப்பட்டதும் நோக்கத்தக்கது.

(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திட்டம் என்ன?

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளவரான சிவஞானம் சிறீதரன் தனது முதல் நேர்காணலில், அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கான தீர்வே அல்ல என்று நிராகரித்திருக்கின்றார். இது அவரது கட்சியின் நீண்ட காலக் கொள்கை நிலைப்பாடும்கூட. அதனையே அவர் வெளிப்படுத்தினார் என்கிறபோதும், அந்த 13ஆவது திருத்தத்தையே நடைமுறைப்படுத்த முன்வராத சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களிடம் இருந்து அவர் கூறும் தமிழர்களுக்கான கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை அவர் எப்படிப் பெறுவார் என்பதை அவர் தெளிவுபடுத்தவேண்டியது கட்டாயம்.

''அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகாது என்பதை நான் பல நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மூலம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளேன். எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பொறுத்தவரையில், 'ஒற்றையாட்சி'க்குள் எட்டப்படும் எந்தத் தீர்வும் அந்த அபிலாஷைகளை நிறைவேற்றாது என்பதே எமது கருத்தாகும். கூட்டாட்சி தீர்வை நோக்கியதே எங்களின் பயணம். அதற்கேற்ப, இந்த அம்சத்தை எங்கள் கட்சியின் கொள்கையில் இணைத்துள்ளோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இதுவரையில் எமது மக்களுக்கு அரசியல் தீர்வாக அமையவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் பல விதிகள் இலங்கை அரசால் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன. 13ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் ஒரு பெரிய தீர்வை எட்ட முடியும் என்று நாம் யாரும் நினைக்கவில்லை.

தமிழர்களின் நிலம், அவர்களின் மொழி, பண்பாடு, கலாசார அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்ட வடக்கு– – கிழக்கு இணைந்த ஒரு தீர்வை நோக்கியே நாம் பயணிக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழர்கள் இந்த மண்ணின் பூர்வீக மக்கள் என்பதை அங்கீகரிக்கவேண்டும். தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் குழு என்பதை அங்கீகரிக்கவேண்டும். எங்கள் பயணம் இந்த திசையிலேயே பயணிக்கிறது. அதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்று நம்புகிறோம். இது வெற்று முழக்கம் மட்டுமேயல்ல. அதனடிப்படையில் பலத்தை வழங்கக்கூடிய ஏனைய சக்திகளையும் உள்ளடக்கியிருக்கவேண்டும்.

நாம் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து எமது பலத்தை வெளிப்படுத்தி அரசியல் தீர்வை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் பலமான சக்தியாக மேற்கொள்வோம்'' என்று அவர் தனது நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இதில் வடக்கு கிழக்கு இணைப்பு, கூட்டாட்சித் தீர்வு ஆகியவையே தனது இலக்கு என்று தெளிவாகத் தெரிவிக்கின்றார். இருப்பினும் அவற்றை எப்படி அடையப் போகின்றார் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை. ஏனைய கட்சிகளுடன் சேர்வதன் மூலம் மட்டும் இந்த இலக்குகளை அடைந்துவிட முடியாது என்பது அவருக்குமே நன்கு தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இருந்த காலத்தில், நாடாளுமன்றத்தில் அதிகளவு ஆசனங்களைக் கொண்டிருந்த காலத்தில்கூட தமிழர்களுக்கான தீர்வைப் பெறமுடிந்ததில்லை, அப்படியிருக்கும்போது இப்போது மட்டும் ஒற்றுமை மூலம் ஒரு தீர்வை அடைய முடியும் என்று சொல்ல முடியாது.

ஆக, தனது பதவிக் காலத்தில் வடக்கு கிழக்கு இணைப்பு மற்றும் கூட்டாட்சித் தீர்வு என்பவற்றை அடைவதற்காகத் தான் கொண்டுள்ள திட்டம் என்ன என்பதை சிறீதரன் தனது நாளைய கொள்கை விளக்க உரையில் உள்ளடக்கவேண்டும். அந்த நேர்காணலில் அவரே சொன்னதைப்போன்று ''வெற்று முழக்கமாக'' அல்லாமல் செயலாக மாறுவதற்கு என்ன திட்டம், வழி வரைபடம் (ரோட் மப்) இருக்கின்றது என்பதை தனது முதல் உரையிலேயே அறிவித்து அதனை முழுமையாகச் செயற்படுத்துவதற்கான திட்டங்களையும் வெளிப்படுத்த வேண்டும்.



# உண்மையை உரைக்கும் உடல்மொழி

**பத்ரி**

மனிதன் ஒரு சமூக விலங்கு என அழைக்கப் படுகிறான். அவனுக்கு மற்றவர்களுடன் அன்றாடம் தொடர்பில் இருக்க வேண்டிய தேவை உள்ளது. ஆதிகாலத்தில் சைகைகளின் வழியே தகவல்களை மனிதன் பரிமாறிக் கொண்டான். மனித நாகரிகம் வளர்ந்த நிலையில் உடல் மொழியுடன் தானறிந்த மொழியையும் தகவல் தொடர்புக்கு அவன் பயன்படுத்தத் தொடங்கினான். எனவேதான், உடல்மொழி நமது அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகிவிட்டது.

குழந்தைகள் பேசத் தொடங்கும் முன்னரே உடல் மொழியைப் புரிந்துகொள்கின்றன. பிறந்து சில மாதமே ஆன குழந்தை நாம் கொஞ்சினால் சிரிப்பது, கடிந்துகொண்டால் அழுவது எல்லாம் உடல் மொழியின் தூண்டல் –துலங்கல் உணர்வுகளே. கொஞ்சம் வளர்ந்த குழந்தை தன் தந்தையிடம் ஏதாவது வாங்கித்தரச் சொல்லி கேட்கவேண்டும் என்றால் அப்பாவின் முகத்தைப் படிக்கிறது.நல்ல மன நிலையில் இருப்பதை உறுதி செய்து கொண்ட பின்னர்தான், தன் தேவைகளைக் கேட்கிறது.

உடல்மொழியில்சொற்களுடன்உடல்அசைவுகள் தகவல்களைப்பரிமாறிக்கொள்ளப்பயன்படுகின்றன. இத்தகைய நடத்தையில் முக பாவங்கள், உடல் தோரணை, சைகைகள், கண் இயக்கம், கால், கை அசைவுகள் ஆகியவையும் அடங்கும். சில நேரங்களில் மொழிகளைப் பயன்படுத்தாமல் உடல் மொழியை மட்டுமே பயன்படுத்தி நாம் வெற்றிகரமாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். தேர்வறையில் குழப்பத்தில் இருக்கும் மாணவர்களுக்கு அதிகம் உதவிக்கு வருவது அவர்களின் நண்பர்களின் உடல்மொழியே ஆகும்.

எதுவும் பேசாமல் இருக்கும்போதுகூட நம் மனதில் என்ன ஓடுகிறது என்பதை நம் முகபாவங்கள் காட்டிக் கொடுத்துவிடும். அதாவது, நம்முடைய உணர்ச்சிகளை, மகிழ்ச்சி, சோகம், கோபம், வருத்தம் போன்றவற்றின் வழியே நம் முகம் காட்டிக் கொடுத்துவிடும்.

கண்களைப் பார்த்து பேசும்போது பலவற்றை நாம் மேலும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். நம் கண்களைப் பார்த்து பேசும் மனிதர்கள் உண்மையை மட்டும்தான் பேச முடியும். நம் கண்களைப் பார்த்துப் பேசும்போது, நம்முடன் விருப்பத்துடன் பேசுகிறாரா, கடமைக்குப் பேசுகிறாரா என்பதையும் தெரிந்து கொள்ளலாம். குற்றம் செய்த ஒருவரின் கண்ணே அவரைக் காட்டிக் கொடுத்து விடும். ஒரு நபர் எவ்வாறு அமர்ந்திருக்கிறார், கை, கால்களை நேராக வைத்திருக்கிறாரா, கால் மேல் கால் போட்டு அமர்ந்துள்ளாரா என்ற அடிப்படையில் அவருடைய உடல் மொழியை நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும். நேராக அமர்ந்திருந்தால், அவர் அதிக தன்னம்பிக்கை கொண்டவர்.

லேசாக கூன் விழுந்தவாறு, சாய்ந்தவாறு அமர்ந் திருந்தால் அவரிடம் தன்னம்பிக்கை குறைவாக இருக்கிறது. அவர் இருக்கும் இடத்தில் அவர்தனக்குசெல்வாக்கு இருப்பதாகஉணரவில்லை என்றும் பொருள்.

கை, கால்களை கோணலாக வைத்துக் கொண்டாலோ, அல்லது குறுக்கு வாட்டாக வைத்துக் கொண்டாலோ நாம் சொல்வதை கேட்பதில் அவருக்கு விருப்பமில்லை என்று பொருள். அந்த நபர் வெளிப்படையாக எதுவும் பேச மாட்டார் என்றும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவர் வீட்டுக்குச் செல்கையில் நமது வருகை அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், அவர்கள் வெளிப்படையாக சொல்லத் தேவையில்லை. அவர்களின் உடல்மொழியே அவர்களின் மனத்தின் நிலைமையை நமக்கு அறிவித்துவிடும்.

கண்காணிப்பு கேமராவின் முன்பு, மற்றவர்களுடைய கண்காணிப்பில் உள்ளபோது மனிதர்களின் நடத்தை ஒழுங்காக இருக்கும். மனிதர்கள் தங்களுக்கு விருப்பமான செயல்களை நியாயத்துக்குப் புறம்பாக இருந்தால்கூட செய்வது இயல்பு. எப்படியிருப்பினும் பெரும்பாலானோர் அவர்களுக்கு வேண்டியவர்கள் முன்னிலையில் ஒருமாதிரியும், அவர்கள் இல்லாதபோது வேறு மாதிரியும் நடந்து கொள்வதை பார்க்கும்போது நம்மால் சிரிக்காமல் இருக்க முடியாது.

ஒருவர் தொடர்ந்து பொய் சொல்வது என்பது ஒரு கலை. அவர்கள் தம் நினைவாற்றலை அதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும். மூளைக்கு நிறைய வேலை கொடுக்க வேண்டும்.

ஒரே நேரத்தில் சொன்ன பொய்களைக் காப்பாற்றுவதற்கான வார்த்தைகளையும் உருவாக்க வேண்டும். பொய்யை உண்மைபோல் பேச வேண்டும். அதே சமயத்தில் உண்மையை மறைக்கவும் வேண்டும். அவர்கள் தாம் எப்போது அகப்பட்டுக் கொள்ளப் போகிறோமோ என்ற பதற்றத்திலேயே இருப்பார்கள்.

நடித்துக் கொண்டே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு வாழ்வதால், இயல்பான வாழ்க்கையை வாழமாட்டார்கள். ஒரு நாள் அவர்களின் உடல் மொழியே அவர்களின் உண்மை உருவத்தை வெளிக்கொணர்ந்து விடும். பொது வெளியில் அவமானத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஒருவருடைய நடத்தையைப் பொறுத்தே அவருடைய உடல் மொழி இருக்கும். பொய் சொல்லுதல், ஏமாற்றுதல் அல்லது ஏதாவது கொடுமைகள் செய்து பழகிவிட்டவருக்கு கெட்ட செயலும் நல்லதாகவே தெரியும். அவர்களுக்கு வாழ்க்கை குறித்த கண்ணோட்டம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். அதற்கேற்ப உடல் மொழிகளும் தகவமைப்பு கொண்டதாக மாறிவிடும். அவ்வாறான மனிதர்களிடம் நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவ்வாறான மனிதர்களின் கவர்ந்திழுக்கும் தோற்றமும், தேனொழுகும் பேச்சும் பெரும்பாலான நேரங்களில் நம்மை ஏமாற்றத்தில் தள்ளிவிடும். நாம் நேர்மையாளரைவிட வெளித்தோற்றத்தையே அதிகமாக நம்புகிறோம். அதனால், ஒருவரை ஆய்ந்தறிந்து அவரின் உண்மைத் தன்மையை உணர்ந்த பின்னரே நட்பு பாராட்ட வேண்டும்.

நேர்மையான மனிதனுக்கு உடல் மொழிக்கும், வாய்மொழிக்கும் இடையே முரண்பாடு இருக்காது. வார்த்தைகள் குழப்பினாலும், பொய் சொன்னாலும், உடல் மொழி மனதில் இருப்பதை காட்டிக் கொடுத்துவிடும். அந்த அளவுக்கு உடல் மொழி மிகவும் சக்தி வாய்ந்தது. நம்மைச் சுற்றி இருப்பவர்களின் உடல்மொழி கூறும் உண்மைகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்முடைய உறவு மற்றவர்களுடன் சிறப்பாக இருக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் சுதந்திர தினம் சிங்களவர்களுக்கும் கரிநாளே

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இடித்துரைப்பு

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சிங்கள மக்களுக்கும் கரிநாள் என்பது பொருத்த மானதே எனத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இலங்கை தீவிலே தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்களைத் தக்க வைப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய பிரகடனத்தைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

குறிப்பாக இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக் களுக்கான உரிமைகள், இருப்புக்கள் மீறப்பட்டு வருகின்றன. ஆட்சிகள் மாறுகின்றன. ஆட்சியா ளர்களும் மாறிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் தமிழ் மக்களுக்காக இன்றுவரை எந்த ஒரு தீர்வு திட்டமும் முன்வைக்கப்படவில் லை. இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுதர சிங்கள தரப்புக்கள் தயாராக இல்லை.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அனைத்து தொழிற்சங்கங்களும் சுதந்திர தினத்தைகட கரிநாளாகப் பிரகடனப்படுத்த ஆதரவை வழங்கவேண்டும்.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை சிதைக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் தீவிர மாக செயற்பட்டு வருகின்றது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே ஊடக சுதந்திரத்தை, ஒரு பொதுமகனின் கருத்து சுதந்திரத்தை கூட இந்த அரசாங்கம் பறித்தெடுத்து கொண்டுதான் இருக்கிறது. இதன் மூலம் போராட்டங்களில் ஈடுபடுகின்ற வர்களை ஒடுக்க இவ்வாறான சட்டங்களை நடைமுறைபடுத்தி மல்லினபடுத்தி அவர்களை கைது செய்யும் நோக்கோடு இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவர்கள் ஒருபோதும் தமிழர்களின் அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாம லாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அத்துமீறிய குடியேற்ற திட்டங்கள், திட்டமிட்ட பௌத்த மயமாக்கலையோ நிறுத்தப்போவதில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும்வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டே ஆகவேண்டும் என்பது வரலாற்று உண்மை.

மேலும் கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்தமானதே. காரணம், சிங்கள மக்களுக்கும் எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்டே வருகின்றன. இதனை அனைத்துத் தரப்புக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

சமநேரத்தில் எங்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதனடிப்படையில் 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்கான ஆரம்ப புள்ளியோ முடிவு புள்ளியோ கிடையாது. 13 ஐ நாம் ஒரு போதும் ஏற்றுகொள்ள முடியாது.

ஆகவே தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களையோ போராட்ட வடிவங்களையோ கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக ம ாணவர் சமூகமாக வலியுறுத்துகின்றோம்.

எங்களுடைய இனம் விடுதலை பெறவேண்டும். இனத்திற்குரிய நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனபடுத்த பூரண ஆதரவைத் தந்துவுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(05)

# தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனுக்கு மன்னாரில் பெருவரவேற்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை வரவேற்கும் முகமாக மன்னாரில் வரவேற்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வரவேற்பு நிகழ்வானது, வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன் னாரில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மன்னாரை வந்தடைந்த சிவஞானம் சிறீதரன், மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார்.

இதனை தொடர்ந்து, அவர், மன்னார் ஆத்தூர் பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைக்கு மோட்டார் சைக்கிள் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த நிகழ் வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், பா.அரியநேந்திரன், சிறீநேசன் ஆகி யோரும் கலாநிதி அகிலன் முத்துக்கு மாரசுவாமியும் கலந்து கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாமியாரை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த கடற்படைச் சிப்பாய்

## கெப்பித்திக்கொல்லாவ பகுதியில் சம்பவம்

மாமியாரை மருமகன் மண்வெட் டியால் தாக்கி கொலை செய்த சம்பவம் ஒன்று வியாழக்கிழமை கெப்பித்திக்கொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் 53 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான பெண் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளார். உயிரிழந்தவரின் மூத்த மக ளுக்கும் அவரது கணவருக்கு- மிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக மகள் கணவனை விட்டு பிரிந்து தாய் வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் சந்தேக நபர் வியாழக்கிழமை வீட்டுக்கு வந்து மாமியாரின் தலையில் மண் வெட்டியால் தாக்கியபோது அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கொலைசெய்த நபர் காலி பிரதேசத்தில் உள்ள கடற்படை முகாமில் பணிபுரியும் கடற்படை வீரர் என்பதுடன் இவரை கைது செய்வதற்கான மேலதி க விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உயிருக்கு ஆபத்தான நிலையில் சாந்தன் சிறுநீரகம் கல்லீரல் என்பன கடும் பாதிப்பு

## சிறைக் கைதிகள் உரிமை அமைப்பு ஸ்டாலினிற்குக் கடிதம்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று பல வருடங்களின் பின்னர் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையாகி தற்போது திருச்சி சிறைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகசிறைக்கைதிகள் உரிமை மையம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

சாந்தனிற்கு கல்லீரல் சிறுநீரகப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைக்கைதிகள் உரிமை மையம் தெரிவித்துள்ளது.

திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால் அவரின் உயிருக்குஆபத்துஏற்பட்டுள்ளது. இதனால்சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும் என சிறைக்கைதிகள் உரிமை மையம் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று தற்போது விடுதலையான சாந்தன், இலங்கைக்கு திரும்புவதற்காக விசா போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கின்றார், திருச்சி முகாமில்அடைக்கப்பட்டுள்ள சாந்தனிற்கு சிறுநீரக பாதிப்பு எற்பட்டுள்ளதால் அவருக்கு உரிய சிகிச்சை வழங்கு-வதற்கான நடவடிக்கைகள் திருச்சி சிறப்பு முகாமில் எடுக்கப்படாததால் அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தமிழக முதல்வர் உரிய நடவடிக்களை எடுக்கவேண்டும் என சிறைக்கைதிகள் உரிமைகள் மையம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் கால்கல் வீங்கியுள்ளன கல்லீரலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் இரண்டுமாதங்களாக உரிய சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. இதனால் அவர் உயிருக்கு போராடுகின்றார் என்பதால் அவரை காப்பாற்றவேண்டும் என சிறைக்கைதிகள் மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (05)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ பிரதி பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்வு




பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான நிஹால் தல்துவ பிரதி பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதன்படி, குற்றப் பிரிவில் கடமையாற்றுவதற்கு மேலதிகமாக பொலிஸ் ஊடகப் பேச்சாளராக நிஹால் தல்துவ தொடர்ந்தும் பணியாற்றுவார்.

பதில்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் கடிதத்தின்படி, புதிய பதவிக்கான கடமைகள் கடந்த 8 ஆம்திகதி முதல்அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சாந்தனை வைத்தியசாலையில் சேர்க்கக் கோரி மனு தாக்கல்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக் கப்பட்டு பின்னர் விடுதலையான சாந்தன் தன்னை சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்க உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியான சாந்தன் கடந்த 2022 இல் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி விடுதலை செய்-யப்பட்டார். அவர் தற்போது திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணத்தில்உள்ளதனது தாயாரை உடனிருந்து கவனிக்க வேண்டியுள்ளதால் தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் தனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதால் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையளிக்க உத்தரவிடக்கோரி சாந்தன், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. சாந்தனிற்கு கல்லீரல் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகசிறைக்கைதிகள் உரிமைமையம் தெரிவித்துள்ளது.

திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும் என சிறைக்கைதிகள் உரிமை மையம் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று தற்போது விடுதலையான சாந்தன் இலங்கைக்கு திரும்பு-வதற்காக விசா போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கின்றார், திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ள சாந்தனிற்கு சிறுநீரக பாதிப்பு எற்பட்டுள்ளதால் அவருக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகள் திருச்சி சிறப்பு முகாமில் எடுக்கப்படாததால் அவரின் உயிரை காப்பாற்றுவதற்காக தமிழக முதல்வர் உரிய நடவடிக்களை எடுக்கவேண்டும்எனசிறைக்கைதிகள் உரிமைகள் மையம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் கால்கல் வீங்கியுள்ளன கல்லீரலும் பாதிக்கப்பட்டுள்ளது எனினும் இரண்டுமாதங்களாக உரிய சிகிச்சைகள்வழங்கப்படவில்லை இதனால் அவர் உயிருக்கு போராடுகின்றார் என்பதால் அவரை காப்பாற்றவேண்டும் என சிறைக்கைதிகள் மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் பாதுகாப்பை கருதியே ராணுவ முகாம்கள்; வடக்கு, கிழக்குக்கு என்று மட்டும் அமைக்கவில்லை

## சாணக்கியனுக்கு பிரமித்த பண்டார பதில்



நாட்டின் தற்கால மற்றும் எதிர்கால பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பல பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருப்பதாக முன்வைக்கப்படும் கருத்துக்களை நிராகரிப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையின்போது, மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தின் மைதானம் இராணுவத்தினர் வசமிருப்பதாக தெரிவித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேலும் கூறியவை வருமாறு -

வடக்கு மற்றும் கிழக்கில் மட்டுமல்ல அனைத்து மாகாணங்களிலும் தற்போதைய மற்றும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் வடக்கு, கிழக்கில் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருப்பதாக சாணக்கியன் முன்வைக்கும் கருத்தை நிராகரிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை என்னிடமுள்ள தகவல்களுக்கமைய குருக்கள்மடம் பாடசாலை சுனாமி அனர்த்தத்தின் பின்னரே வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதன்பின்னர் இராணுவ படைப் பிரிவொன்றின் தலைமையகம் இந்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முகாமுக்கு வெளியில் குறித்த மைதானம் உள்ளது. அதற்கு அருகில் இரண்டு ஏக்கர் அளவிலான இராணுவ முகமொன்றே உள்ளது.

கிழக்கில் இதற்கு முன்னர் 44,980 ஏக்கர் இராணுவத்தினர் வசமிருந்தது. இதில் 90 வீதத்திற்கும் அதிகமான காணிகள் மக்களிடம் மீள்குடியேற்றத்திற்காக கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது இராணுவத்தினரிடம் 7,379 ஏக்கர் காணிகளே உள்ளன. இவற்றில் 37.8 ஏக்கர் மட்டுமே தனியார் காணிகளாக உள்ளன. 7342 ஏக்கர் அரச காணிகளாகும். தனியார் காணியில் 8 ஏக்கர் காணியை இந்த வருடத்தில் மீள கையளிப்போம். இதில் இனவாதத்தை இணைக்க வேண்டாம் என்று கோருகின்றேன். - என்றார். (05)

# மாம்புரி கடலில் மிதந்துவந்த 16 பீடி இலை மூடைகள் மீட்பு



புத்தளம், கற்பிட்டி, மாம்புரி கடற்கரை பகுதியில் கடலில் மிதந்த நிலையில் 16 பீடி இலை மூடைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணிக்கும் நடவடிக்கையின்போது மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கடலில் மிதந்த நிலையில் 16 மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூடைகள் சோதனையிட்ட போது அவற்றிலிருந்து 520 கிலோ 760 கிராம் நிறையுடைய பீடி இலைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல்காரர்களால் கொண்டுவரப்பட்ட குறித்த பீடி இலைகளானது கடற்படையினரின் நடவடிக்கை காரணமாக கரைக்கு எடுத்துச்செல்ல முடியாமல் கடலிலேயே கைவிட்டுள்ளதாக கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (05)

# ஆசிரியர் பற்றாக்குறைக்கு பெப்ரவரி இறுதிக்குள் தீர்வு

## அமைச்சர் சுசில் உத்தரவாதம்



நாடு முழுவும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதியாகும்போது தீர்த்துக்கொள்ள முடியுமாகும். அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகையில் -

சக்பொல வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்காக கருணாகலை பொல்கஹவலை அல் இர்பான் வித்தியாலயம் மற்றும் கொழும்பு தாருஸ்ஸலாம் பாடசாலைகளுக்கு நாங்கள் சென்றிருந்தோம். அப்போது அந்த பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக எமக்கு உணர்த்தப்பட்டடிருந்தது.. பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை நாடு முழுவதும் இடம்பெற்றுவரும் ஒன்றாகும்.

அதனால் குறிப்பாக குருணாகலை பொல்கஹவல அல் இர்பான வித்தியாலயத்தில் 43 ஆசிரியர் இருக்கவேண்டும். ஆனால் அங்கு 21 ஆசிரியர்களே தற்போது கடமையில் இருக்கின்றனர். அதேபோன்று தாருஸ்ஸலாம் பாடசாலையில் 63 ஆசிரியர்கள் இருக்கவேண்டும். ஆனால் அங்கு 33 ஆசிரியர்களே இருக்கின்றனர். இந்த பாடசாலைகளில் பாரியளவில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகிறது. அதனால் இந்த 2 பாடசாலைகளிலும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு இல்லாவிட்டால் எமது நாட்டு கல்வி நடவடிக்கை முறையற்ற முறையிலேயே செயற்படுகிறது என்றே தெரிவிக்க வேண்டி வரும். இந்த 2 பாடசாலைகளில் மாத்திரம் அல்ல, நாடு முழுவதுமாக 40 ஆயிரம் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. அதனால் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில்,

பட்டதாரிகள் 22 ஆயிரம் பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு 9 மாதங்களாக விசாரணை செய்து கடந்த வாரமே அது முடிவுக்கு வந்தது. அடுத்த வாரமாகும்போது நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். அதேபோன்று 13 ஆயிரத்தி 500 பேரை இணைத்துக்கொள் வதற்காக மாகாணசபைகள் நட வடிக்கை எடுத்திருக்கின்றன. அது தொடர்பில் நீதிமன்றில் எழுத்துமூல உத்தரவு இருக்கின்றன.

அந்த உத்தரவு கிடைக்கப்பெற்றால் பெரும்பான்மையான ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு கிடைத்துவிடும். மேலும் 5500 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும். தற்போது பரீட்சை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பெப்ரவரி மாதம் இறுதியாகும்போது ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமாகும். -என்றார். (05)

# 20 அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பில் அடுத்த வாரம் அமைச்சரவைக்குப் பத்திரம்

## நளின் பெர்னாண்டோ தகவல்



பால்மா, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட 20 அத்தியாவசியப் பொருள்களின் தேவை அல்லது குறைபாடு தொடர்பில் எதிர்வரும் வாரம் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் புத்திக பத்திரன எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டிற்கு பால்மா இறக்குமதி செய்யும் போது சுகாதார அமைச்சு மற்றும் தர நிர்ணய சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பால் மாவின் தரம் தொடர்பில் இதுவரை அளவீடு ஒன்று நடைமுறையில் இல்லாமல் இருந்தது. நான் வர்த்தக அமைச்சராக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அதனை சமர்ப்பித்து இறக்குமதி செய்யும் பால் மாவில் கலக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நடவடிக்கை எடுத்தேன்.

அந்த நிறுவனம் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த மாதமளவில் எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. அதன் மூலம் இனி இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தரம் தொடர்பில் நாம் உறுதிப்பாடு வழங்க முடியும் .

பால்மா மட்டுமல்ல நாட்டில் 20 அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பில் நான் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன். அந்த வகையில் பால் மா, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்ற நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் எமது நாட்டின் உற்பத்தி மேலதிகமாக காணப்படுகின்றதா? அல்லது நாட்டின் தேவைக்குக் குறைவாகக் காணப்படுகின்றதா என்பது தொடர்பிலும் அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பிலும் எம்மிடம் உள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளோம்.

விவசாய அமைச்சின் தரவுகளுக்கு அமைவாக நாம் அதனை தயாரித்துள்ளோம். அதனோடு இணைந்த ஏனைய நிறுவனங்களுடனும் அது தொடர்பில் நாம் பேச்சு நடத்தியுள்ளோம்.

குறிப்பாக நாம் பால்மாவுக்கான வரி அதிகரிப்பை மேற்கொண்டதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்துள்ளோம். அத்துடன் தேசிய பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். பால்மா இறக்குமதியை குறைக்கும் வகையிலேயே அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். -என்றார். (05)

# இளைஞரைக் கடத்தித் தாக்கி வீதியில் விட்டுச் சென்றநபர்கள்

## புத்தளத்தில் சம்பவம்

தகராறு காரணமாக இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தாக்குதலுக்கு உட்படுத்தி வீதியில் விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இளைஞருக்கும் போதைப்பொருள் விற்பனையாளர் ஒருவருக்கும் இடையில் சில நாள்களாக தனிப்பட்ட ரீதியில் தகராறு ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தின் போது ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணிக்கு சந்தேக நபர்கள் சிலர் குறித்த இளைஞரை கடத்திச்சென்று வீட்டொன்றிற்குள் வைத்து அவரை தாக்கி பின்னர் அதிகாலை 5.30 மணிக்கு வீதியில் விட்டு சென்றுள்ளனர்.

காயமடைந்தவர் பிரதேசவாசிகளின் உதவியுடன் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெளிநாட்டுக் குடிமகனின் சடலம் கொழும்பு கொம்பனி வீதியில் மீட்பு

கொம்பனிவீதி சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் ஐந்தாவது மாடியின் நடைபாதையுடன் கூடிய பூங்கா ஒன்றில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனக் கொம்பனி வீதி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (05)

# தொடம்கஸ்லந்தவில விகாரை மீது புதனிரவு துப்பாக்கிச் சூடு

தொடம்கஸ்லந்த உடத்தபொல புராதன விகாரை மீது புதன்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதுராகொட பொலிஸார் தெரிவிக்கின்றனர். விகாராதிபதியின் வரவேற்பறையில் உள்ள ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போதிலும் விகாராதிபதிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அரச அதிகாரிகளின் தவறுகளால் முதலீட்டாளர்கள் இலங்கைக்குத் திரும்பவும் வராமல் போகலாமாம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்



அருவக்காலு குப்பைத் திட்டம் செயற்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இறுதிக்கட்ட பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

அருவாக்காலு குப்பைத் திட்டம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில அரச அதிகாரிகள் செய்யும் இவ்வாறான தாமதங்கள் மற்றும் தவறுகளால் முதலீட்டாளர்கள் இலங்கைக்குத் திரும்ப வராமல் போகலாம் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சீன நிறுவனமான சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கம்பெனி மற்றும் சீனாவின் சவுத்வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஆகியவை இணைந்து அருவாக்காலு குப்பை கிடங்கின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் அந்த நாடுகளுக்கு மத்தியில் தேசிய மட்டத்தில் அது பாதிக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் நிலையான செயற்பாட்டிற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 5,500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரச நிதியைப் பயன்படுத்தாமல் தனியார் நிறுவனத்துடன் இணைந்து நிதி ரீதியாக இலாபகரமான மற்றும் நிலையான வகையில் அதனை நடத்தவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். வர்த்தக மாதிரியின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஓரளவு ஈவுத் தொகையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை செயற்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுந்தன. இப்பிரச்னைக்கு தீர்வுகாண நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்கள் முன்வைக்கும் பல்வேறு செலவுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா இங்கு கூறினார்.

சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் சவுத்வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஒப் சைனா ஆகிய நிறுவனங்களுடனான ஒப்பந்தம் முடிவடைந்ததையடுத்து, இந்தத் திட்டத்தை அரசு-தனியார் கூட்டுறவின் கீழ் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் பணிகள் இந்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை 03 மாதங்கள் வேலைத்தளத்தில் தங்கியிருக்கும் செயற்திட்ட இயக்குநர்களுக்கு பயிற்சியளிக்க சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கொழும்பு நகரின் திண்மக் கழிவுகளை அகற்றும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புத்தளம், அருவாக்காலு பகுதியில் உள்ள சுண்ணாம்புக் கல்லில் இருந்து இடித்து அகற்றப்பட்ட கைவிடப்பட்ட குழிகள் தொடர்பாக சுகாதார கழிவுகளை அகற்றும் வசதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு உள்ளிட்ட பிற வசதிகளை நிர்மாணிக்கும் பொறுப்பு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப் ஒப்படைக்கப்பட்டுள்ளது. களனி மற்றும் புத்தளத்தில் 02 கழிவுப் பரிமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதும் அது தொடர்பான ரயில் உட்கட்டமைப்பு மற்றும் வீதி அமைப்பும் இதன் கீழ் இடம்பெறுகிறது.

கொழும்பைச் சுற்றி உருவாகும் 1,200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி கழிவுப் பரிமாற்ற நிலையத்திற்குக் கொண்டுவந்து, அதனை அமுக்கி கொள்கலன் பெட்டிகளில் அடைத்து, அருவாக்கலுவில் சுகாதாரமான முறையில் அகற்றுவதற்காக ரயிலில் கொண்டு செல்ல இந்தத் திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் தற்போது மேல்மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களால் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகள் அனைத்தும் சுகாதாரமான முறையில் அகற்றப்படும் வகையில் இந்த வசதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

திட்டத்தின் மொத்த செலவு 130 மில்லியன் அமெரிக்க டொலர்கள். களனி இடமாற்ற நிலையத்திலிருந்து அருவக்காலு குப்பைக் கிடங்குக்கு புகையிரதத்தில் குப்பைகளை கொண்டு செல்வதற்காக 4 இன்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. திட்டத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கும் வரை பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்த புகையிரதத் திணைக்களத்துக்கு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குப்பை போக்குவரத்துக்கு தேவையான 94 கொள்கலன் பெட்டிகளும் வாங்கப்பட்டுள்ளன. இலங்கை புகையிரத திணைக்களம் களனியிலிருந்து அருவக்காலுக்கு குப்பைகளை கொண்டு செல்வதற்கு தேவையான 17 புகையிரதங்களை வழங்குவதற்கு 549.06 மில்லியன் ரூபா மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. அந்த தொகையை வழங்க அமைச்சரவையின் அனுமதி பெறப்பட உள்ளது.

பொதுவாக, கொழும்பு நகரில் மாத்திரம் தினமும் 600 மெற்றிக் தொன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. களனி பகுதியில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து புகையிரதத்தில் அருவக்காலு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு சேமிக்கப்படும்.

அருவக்காலு பகுதியில் 265 ஏக்கர் பரப்பளவில் இந்த குப்பை கொட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் பல ஏக்கர் பூங்காவாகவும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அழகுபடுத்தப்பட்டிருப்பதும் சிறப்பு.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பேராசிரியர் சி. வெடிக்கார மற்றும் ஏனைய அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(05)

# பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்களுக்கு ஐ.நா.பெண்கள் அமைப்பும் ஜப்பானும் சேர்ந்து ஆதரவு







ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐ.நாவின் பெண்கள் அமைப்பும் மற்றும் கிறிசாலிஸ் நிறுவனமும் இணைந்து நாட்டில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டபெண்கள் தலைமையிலான 600 சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு 110 மில்லியன் ரூபா மதிப்புள்ள உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

'நெருக்கடியில் உள்ள பெண்களுக்கு அதிகாரமளித்தல்' என்ற நோக்கத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட ஒருவருட திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் ஒத்துழைப்புடன் ஐ.நா. பெண்கள் அமைப்பு மற்றும் கிறிசாலிஸ் நிறுவனமும் இணைந்து இலங்கையில் சமூகப் பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வொன்று அண்மையில் பத்தரமுல்லையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய இங்கைக்கான ஜப்பான் தூதுவர் கூறுகையில் -

'இலங்கையில் 5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த மகத்தான முயற்சிக்கு ஜப்பான் தூதரகம் ஆதரவளிப்பதில் மகிழ்ச்சி அடைவதோடு, பெண்களின் பொருளாதாரத்திற்கு ஆதரவாக ஐ.நா. பெண்கள் அமைப்புடன் இணைந்து இந்தக் கூட்டுறவை தொடர நாங்கள் எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா.வின் மகளிர் பிராந்திய அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் சாரா நிப்ஸ்,

'ஜப்பான் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 600 பெண்கள் தலைமையிலான நுண் நிறுவனங்களுக்கு வர்த்தகம் தொடர்பான மேம்பட்ட பயிற்சிகளை வழங்கியுள்ளோம். டிஜற்றல் கருவிகள் மற்றும் வளங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் தயாரிப்புகளை சிறந்த முறையில் சந்தைப்படுத்த முடியும்.

ஐ.நா. பெண்களுக்கான பயிற்சியில் பங்கேற்றமை எனக்கு சிறந்த சாத்தியக்கூறுகளை உருவாக்கியது. சமூக ஊடக தளங்கள் மற்றும் இணைய வணிகச் செயல்பாடுகளுக்கான அவற்றின் திறனைப் பற்றி நான் கற்றுக்கொண்டேன். எனது குழந்தைகளின் உதவியுடன், நான் இப்போது எனது சொந்த சமூக ஊடகப் பக்கத்தை நிர்வகிக்கிறேன், எனது தயாரிப்புகளை காட்சிப்படுத்த பேஸ்புக் மற்றும் யூரூப் போன்ற தளங்களை மேம்படுத்துகிறேன். குறுகிய காலத்தில் அதிக வாடிக்கையாளர்களை நான் அடைந்ததால் எனது உற்பத்திற்கான பிரச்சினையை தீர்க்க இது எனக்கு உதவியது' என்று வட மாகாணத்தின் கனகராயன்குளத்தைச் சேர்ந்த தொழிலதிபரும் நிகழ்ச்சியின் பங்கேற்பாளருமான தர்சன் வக்சலா கூறினார்.

அம்பாறை, கொழும்பு, மொனராகலை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பெண்கள் தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இத்திட்டம் பெரிதும் துணைபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

போட்டிச் சந்தையுடன், ஏற்று மதியை அதிகரிக்கவும், அன்னியச் செலாவணியை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெப்ரவரி 03 ஆம் திகதி தாய்லாந்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளோம். நம் நாட்டைப் போலவே தாய்லாந்தும் தேரவாத பௌத்த நாடு. ஆனால் அவர்கள் தனி வழியில் சென்றனர். நாங்கள் வேறு வழியில் சென்றோம். அதன் வேறுபட்ட பலன்களை இன்று காண்கிறோம்.

நாம் எடுக்கும் தீர்மானங்களினால் இந்த நாட்டின் எதிர்காலப் பொருளாதாரம் எவ்வாறு அமையும் என்பதைச் சிந்திக்க வேண்டும். நாம் கலந்துரையாட வேண்டும். அவை பற்றி அரசியல் கட்சிகள் கலந்தாலோசிக்க வேண்டும். அவர்கள் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்த நாட்டின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

நிலவிலிருந்து அரிசி கொண்டுவருவதாக கட்டுக்கதைகளை கூறி அதனை செய்ய முடியாது. தற்போது எம்மால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இணங்க முடியுமா? அல்லது அவற்றை மாற்றியமைக்க வேண்டுமா? என்பது தொடர்பில் ஆலோசிக்க வேண்டும்.

நாம் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை கைசாத்திட்டுள்ளோம். அந்த ஒப்பந்தம் இன்னும் 15 - 16 நாடுகளுடன் கைசாத்திடப்படவுள்ளது. அதிலிருந்து நாம் விடுபட்டுச் செல்ல முடியாது. அதனை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது. அது தொடர்பில் நாம் அனைவரும் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் இன்றும் எமது அரசியல், அப்பளத்தை போலவே உள்ளது. பொரித்தவுடன் அதனை எடுத்து சாப்பிடுகிறோம். மறுதினம் மற்றொன்றை போடுகிறோம் பின்னர் அதனை மறந்துவிடுவோம்.

சமூக ஊடகங்கள் தொடர்பிலான சட்டம் கொண்டுவரப்பட்ட போது நாட்டில் கருத்துச் சுதந்திரம் பறிக்கப் படுகிறது எனக் கூச்சலிட்டனர். இருப்பினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அதனை அனைவரும் மறந்துவிட்டனர். அதேபோல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்பிக்கப்படவுள்ளது. இதன்போதும் மக்களின் உரிமை மீறப்படுகிறது, அனைவரையும் சிறையில் அடைக்க போகிறார்கள் எனக் கூச்சலிடுவர். பின்னர் அதை மறந்துவிடுவார்கள்.

அதன் பின்னர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் சமர்பிக்கப்படும் போது கல்வி ஒழிக்கப்படுவதாக கூச்சலிடுவர். பின்னர் மறந்துவிடுவார்கள். அப்பளத்தை போல் மேலே வந்த பின்னர் சத்தம் குறைந்துவிடும். இந்த அரசியலுக்கு என்னால் முடிவுகட்ட முடியாது. இருப்பினும் அவ்வறான அரசியலே எமது நாட்டின் இந்த நிலைக்கு காரணம் என்பதை கூற முடியும்.

எமது நிலையிலிருந்து எழுந்து முன்னேறிச் செல்வதற்கான இயலுமை எமக்கு இருக்க வேண்டும். அதனால் உங்களுடைய எதிர்காலம் மாத்திரமின்றி உங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் சிறக்கும். அதனால் சர்தேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் அவசியமா? இல்லையா? மாற்றங்கள் அவசியமா என்பதை பாராளுமன்றத்தில் ஆலோசிக்க வருமாறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை இங்கு அழைக்கவும் நாம் தயாராக இருக்கிறோம். அவருடன் அனைவரும் கலந்தாலோசிக்கலாம். ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான வழிகள் இருந்தால் அதனை எவ்வாறு செய்யலாம் எனக் கூறுங்கள். நல்ல திருத்தங்களை நாம் ஏற்றுக்கொள்வோம். இருப்பினும் தற்போதுள்ள ஒப்பந்தத்திற்கு அமைவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்றார்.

## பெப். 15 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பதன் ஊடாக தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பதையே, 2024 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன அமைச்சின் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வருட வரவுசெலவு திட்டத்தில் நீர்ப்பாசன அமைச்சுக்கு 23,413 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இதில் நீர்த்தேக்க பராமரிப்புக்காக 6,913 மில்லியன் ரூபாவும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 16,500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு உள்நாட்டு நிதியாக 4,678 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் 1,590 மில்லியன் ரூபா விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கால்நடை மேம்பாட்டிற்கு 930 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக பல பாரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் பெரும்பாலான திட்டங்கள் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் ஆரம்பிக்கப்பட்ட உமாஓயா திட்டத்தின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. எனவே, பெப்ரவரி 15ஆம் திகதிக்குள் 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தேசிய மின் கட்டமைப்பில் சூரிய சக்தி மற்றும் நீர் மின்உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் இந்த ஆண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இதன் கீழ், நிலம், கூரைகள் மற்றும் நீரில் மிதக்கும் சூரிய மின்கலங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

நீரில் மிதக்கும் சோலார் பேனல்கள் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்காக 31 நீர்த்தேக்கங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்தவகையில், இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான 14 நீர்த்தேக்கங்களிலிருந்து 2,524 மெகாவோல்ட் மின்சாரத்தையும் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்குச் சொந்தமான 17 நீர்த்தேக்கங்களிலிருந்து 553 மெகாவோட் மின்சாரத்தையும் உற்பத்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மின்சார அமைச்சுடன் இணைந்து செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

உமாஓயா திட்டத்துடன் இணைந்து 4,500 ஹெக்டேயர் நெற்பயிர்களுக்கும் 1,500 ஹெக்டேயர் புதிய நெற்செய்கைகளுக்கும் நீர் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் ஊடாக மினிப்பே கால்வாயின் கரையை 3.5 மீற்றர் உயர்த்தி புனரமைக்கவும், 11 கிலோமீற்றர் சுரங்கப்பாதையுடன் கூடிய 90 கிலோமீற்றர் நீளமான கால்வாய் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், வடமத்திய பெரிய கால்வாய் நிர்மாணிப்பதன் மூலம் 07 பிரதான குளங்களுக்கும் 350 சிறிய குளங்களுக்கும் இரு போகங்களுக்குத் தேவையான நீரை வழங்க முடியும். மேலும் ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் பேருக்கு குடிநீர் வழங்கவும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப்பாதுகாப்போடு விவசாய அமைப்புகளின் மூலம் கிராமப்புற விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உலகவங்கியின் உதவியின் கீழ் 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியம் உள்ளது என்ற கவலைகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். இதைத் தவிர்க்க, நிகழ்நிலை சட்டத்தின் கீழ் தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தை எதிர்கொள்ள எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் கருத்துச்சுதந்திரம் உட்பட அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிசெய்ய வேண்டும்" என்றார்.

ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்பன் தெரிவிக்கையில், "இணையத்தை ஒழுங்குபடுத்துவது அவசியம் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். அது எவ்வாறு செய்யப்படுகிறது என்பதுதான் முக்கியம். கருத்துச் சுதந்திரத்திற்கான வெளியை அனுமதிப்பது, அத்துடன் துடிப்பான டிஜிட்டல் பொருளாதாரத்தின் புத்தாக்க மற்றும் மேம்பாடு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்வதோடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஜனநாயகத்திற்கு முக்கியமானதாகும். புதிய நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டம் சர்வதேச சிறந்த நடைமுறை மற்றும் தரநிலைகளுக்கு ஏற்பசெயற் படுத்தப்படுவதை உறுதிசெய்ய இலங்கையை நாங்கள் ஊக்குவிக்கிறோம்" என்றார்

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமென்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கடைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்பாடாக யாழ். நகரப் பகுதி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கடைகள் சந்தைகளில் நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் துப்புரவு நடவடிக்கைகளை இன்று மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மாவட்டச் செயலர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு யாழ் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், சுகாதாரப் பிரவினர், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர், நல்லூர் பிரதேசசபை செயலாளர் மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசசெயலாளர்களுடன் மாவட்டச்செயலகத்தில் ஜனவரி 23 கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக, யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி நகர்ப்புறங்களில் உள்ள கடையுரிமையாளர்கள் நுளம்பு பெருகக் கூடிய இடங்களை இன்று சனிக்கிழமை துப்புரவு செய்யவேண்டும்.

தங்கள் வியாபார/ தொழில் முயற்சிக்குரிய கட்டடம், காணி மற்றும் சுற்றுச்சூழலினை நுளம்பு பெருகாதவாறு துப்பரவு செய்வதுடன், தொடர்ந்தும் இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்காது, டெங்கு நுளம்பு பெருகக்கூடிய நிலையில் கடைச்சூழலினை வைத்திருப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்டுநாயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதான ஒருவர் உயிரிழந்தார்.

வானியில் பயணித்த மேலும் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் ராகமை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடங்கியுள்ளனனர்.

இந்த அதிவேக வீதியில் வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் கொன்ஸ்டபிள் ஆகியோர் உயிரிழந்திருந்தனர்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலல்கொட, எ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரத்ன, அர்ஜுன ஒபேசேகர உள்ளிட்ட ஐவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி நய்ஜல் ஹெடி, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி லக்ஷான் டயஸ், சட்டத்தரணி தனுக நந்தசிறி, சிரேஷ்ட சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் ஆஜராகியிருந்தனர்.

போர் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில், புதிய பயங்கரவாத அமைப்பொன்று மீண்டும் உருவாகுமெனக் கருதக்கூடிய சூழல் காணப்படாத பின்னணியில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் ஊடாக எதிர் கருத்துகளை ஒடுக்குவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று மனுதாரர்களின் சார்பில் ஆஜரான மேற்படி சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இலங்கை நாடு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்று அடையாளப்படுத்தப்படுவதன் காரணமாக, மக்களை பாதுகாத்தல், அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகியன அரசமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆட்சியாளர்களின் தூரநோக்கற்ற செயற்பாடுகளுக்கு எதிராக குரலெழுப்பும் மக்களை ஒடுக்கு வதற்கு இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில உட்பிரிவுகள், பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமாக மாத்திரமின்றி, சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது நீதிமன்றத்திடமே காணப்படுவதாகவும் அச்சட்டத் தரணிகள் வாதிட்டனர்.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் முன்னிலையாகியிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை எமது அரசில் இரத்துச்செய்வோம்

## ஹர்ஷ டி சில்வா உறுதி



நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு 98 சதவீதமான மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். எமது ஆட்சியில் இந்த சட்டமூலம் முழுமையாக இரத்து செய்யப்படும். ஜனநாயகம்நாடாளுமன்றத்துக்குள்உள்ளதா, வெளியில் உள்ளதாஎன்பதுதெளிவாகியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்றநிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைபட பாதுகாக்க வேண்டும், 225 உறுப்பினர்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்கிறோம். நிகழ்நிலை காப்புச்சட்டமூலம்தொடர்பில்தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான அமைப்புகள் பலயோசனைகளை முன்வைத்துள்ள நிலையில் அவற்றை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் 98 சதவீதமானோர் இந்த சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். ஆகவே ஜனநாயகம் நாடாளுமன்றத்தில் உள்ளதா? அல்லது வெளியில் உள்ளதா என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

சமூக ஊடகங்கள் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்த சட்டமூலம் கண்காணிப்பதற்கு பதிலாக அடக்குமுறைகளை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. ஆகவே எமது அரசாங்கத்தில் இந்த சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு,அனைவரும்ஏற்றுக்கொள்ளும் வகையில் சட்டமியற்றப்படும்.

இந்த சட்டமூலத்தில் சமூக வலைத்தளங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் தவறான கருத்துக்களை பதிவேற்றம் செய்பவர்கள் குற்றவாளியாக பார்க்கப்பட வேண்டும். சமூகவலைத்தளங்களைகுற்றவாளிகளாக சித்திரிப்பதை பேஸ்புக், மெட்டா, கூகுள், யூடியூப் உள்ளிட்ட நிறுவனங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.

இந்த சட்டமூலத்தால்கிராமிய மற்றும்நகர வணிகபொருளாதாரம்பாதிக்கப்படும். அத்துடன் அரசாங்கத்தின் டிஜிற்றல்பொருளாதாரம்என்ற இலக்கு கேள்விக்குள்ளாக்கப்படும் என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்கிறேன். என்றார். (05)

# தம் சொந்தக் காணியில் இராணுவம் விவசாயம் செய்வதை வேலியால் பார்க்கும் வடக்கு மக்கள்

## சாணக்கியன் வேதனை

தங்களது சொந்த காணியில் இராணுவம் விவசாயம் செய்வதை வேலியால் பார்க்கும் வட பகுதி மக்களின் நிலை யாருக்கும் வரக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கேள்விபதிலின் போது பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் முடிந்து தற்போது 15 வருடங்கள் முடிவடையப் போகின்றது. 15 வருடங்களுக்குப் பின்னரும் குறிப்பாக இந்த வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மாத்திரம் இராணுவ முகாம்களைபாதுகாப்பு கருதி வைத்திருக்கின்றோம் எனக் கூறுவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

குருக்கள் மடம் பாடசாலைக் குரிய மைதானக் காணியானது இராணுவ கட்டுப்பாட்டினுள் இல்லை எனக் கூறினாலும் தற்போது வரை அவ் மைதான காணி இராணுவ கட்டுப் பாட்டிலேயே இருக்கிறது.

மொறக்கொட்டான் சேனையில் இராணுவ முகாம் அமைத்திருக்கும் பாடசாலைக்கு பதிலாக பிறிதொரு பாடசாலையினை அமைத்ததாக கூறியுள்ளீர்கள்.

புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை ஓர் ஆற்றோர பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதனை அக் கிராம பெற்றோர்களோ, பிள்ளைகளோ விரும்பவில்லை.

தற்காலிகமான மாற்று வழியாக அப் பாடசாலையை பயன்படுத்தினாலும் தொடர்ந்து அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மொறக்கொட்டான் சேனையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை பாதுகாப்பிற்கு முக்கியம் எனக் கருதுகின்றீர்கள். கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை நீங்கள் பயணம் செய்யவில்லை என்று நினைக்கின்றேன். ஏனெனில் பொலன்நறுவை - மன்னம்பிட்டி வரை ஏராளமான காணிகள் உங்களது இராணுவ முகாம்களை அமைப்பதற்கு காணப்படுகின்றது. அவ்வாறிருக்க நீங்கள் கிராமத்தின் நடுப்பகுதியில் இருக்கும் காணியே முக்கியம் எனக் கருதுவதை நாங்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

வடக்கில் பலாலி பிரதேசத்தில் கூட மக்களுடைய நிலங்களில் இராணுவத்தினர் நிலத்திற்கு உரிமையுடைய மக்கள் வேலியால் பார்க்கும் வண்ணம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். மக்களுடைய காணிகளை இராணுவத்தினர் அபகரித்துள்ளனர். ஜனாதிபதியிடம் ஒவ்வொரு முறையும் சந்தித்து இது தொடர்பில் பேசும்போது ஜனாதிபதி அவர்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் 'ஏன் இன்னும் இந்த காணிகள் விடுவிக்கப்படவில்லை' எனக் கேள்வி எழுப்புவார். ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்து ஒரு விடயத்தைக் கூறினால்; பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கூறாத விடயங்களை புரிகின்றார். 'இதில் உண்மை பேசுவது ஜனாதிபதியா? அல்லது பாதுகாப்பு அமைச்சரா?' இதுவே என் முதற் கேள்வி...

சுனாமியின் காரணமாக இராணுவ முகாம்களை பாடசாலைக்கு கொண்டு சென்றார்கள். ஆனால் மைதானங்களைதூக்கிக் கொண்டு செல்ல முடியாது. கல்வி கற்பிப்பது என்பது ஒரு கட்டடத்தினுள் மேற்கொள்ளும் விடயமன்று. அதற்கு சிறந்த இடவசதிகள் தேவை. பாடசாலையினை பிரதான வீதியில் கட்டுவதற்கு மைதானத்தினை கொண்டு செல்ல முடியாது. பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்காக வேறு காணிகளை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும். காயங்கேணி பகுதியில் கடற்படை செயற்பாடுகளுக்கு காணி வேண்டும் எனக் கூறி காணிகளை அபகரிக்கின்றனர். பாலையடிவேட்டையில், தாண்டியடி போன்ற இடங்களிலும் காணி அபகரிப்பு நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. ஆகவே 'இந்த காணிகளை விடுவிப்பதற்கான எண்ணம் உங்களிடம் இருக்கிறதா? இல்லையா?' என்ற இவ்வாறான கேள்விகள் பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்பப்பட்டன. (05)

# யுக்திய நடவடிக்கைகளில் 838 சந்தேகநபர்கள் கைது



நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 838 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 549 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய 289 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 549 பேரில் 5 பேருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் போதைப்பொருளுக்கு அடிமையாக உள்ள 10 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தால் தேடப்பட்டு வரும் பட்டியலில் இருந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 289 சந்தேக நபர்களில் 35 பேர் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ள நிலையில் 246 பேர் ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் 211 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 78 கிராம் ஐஸ் போதைப்பொருள், 16 கிலோ 600 கிராம் கஞ்சா, 9,974 கஞ்சா இலைகள், 1,192 போதை மாத்திரைகள், 493 கிராம் மாவா போதைப்பொருள் மற்றும் 36 கிராம் மதனமோதகம் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# மாணவனின் மர்ம உயிரிழப்பு; மத்ரஸா குறித்து ஆராயக் குழு

*மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பான சம்பவம் தொடர்பில் முஸ்லீம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் விசாரணை மேற்கொள்வதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.*

*அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி அன்று மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) எனும் மாணவன் தூக்கில் தொங்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.*

*மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ளத் தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டு வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டு மன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*இச்சம்பவத்தை அடுத்து தற்போது நீதிக்கான மைய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஃபி எச்.இஸ்மாயில் உள்ளிட்ட இதரதரப்பினரால் முஸ்லீம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய குறித்த மத்ரஸா தொடர்பில் அக்குழு துரித விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.*

*இவ்விசாரணையை முன்னெடுக்கும் குழுவில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் அதிகாரி மற்றும் 4 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்விடயம் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றினையும் அக்குழுவினர் வெளியிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)*

# குரங்குகள் தாக்கியதில் 9 வயதுச் சிறுமி காயம்

## மாவனல்லையில் சம்பவம்



கேகாலை - மாவனல்லை பிரதேசத்தில் 9 வயது சிறுமியை அவரது வீட்டிற்கு அருகில் குரங்குகள் தாக்கி காயப்படுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த சிறுமியின் தாய் இது தொடர்பில் தெரிவிக்கையில் -

குறித்த சம்பவத்தின் போது நான் நெல்லை வேக வைத்து வீட்டின் முற்றத்தில் காயவைத்திருந்தேன். இந்நிலையில் எனது மகன் காயவைத்திருந்த நெல்லைஉண்ணவந்தகுரங்குகளை துரத் திக் கொண்டிருந்தார்.

இதன்போது எனது மகள் வீட்டின் முற்றத்தில் காணப்பட்டார். இந் நிலையில் நெல்லை உண்ண வந்த 4 குரங்குகள் எனது மகளின் மீது பாய்ந்த போது அவர் பயந்து ஓட முற்பட்ட போது கீழே வீழ்ந்துவிட்டார்.

இதன்போது அங்கிருந்து குரங்கு எனது மகளின் முழங்கால் பகுதியை கடித்து காயப்படுத்தியது. பின்னர் எனது மகன், வீட்டில் இருந்த பொருள் ஒன்றினால் குரங்குகளை தாக்கி அவற்றை அங்கிருந்து துரத்திவிட்டார்.

இதனையடுத்து நான் எனது மகளை மாவனல்லை அரச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன். அங்கிருந்த வைத்தியர் 'குரங்கிற்கு இரத்த சுவை பழகினால் அடிக்கடி மகளையும் வேறு மனிதர்களையும் தாக்கஆரம்பித்துவிடும்'என்றுகூறினார்.

இந்நிலையில் குரங்குகள் அதிகரித்துள்ள கேகாலை பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் குரங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பில்அதிகாரிகளிடம்தெரிவித்தும் இதுவரைஎந்தவிதநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கேகாலை பிரதேசத்தில் மாத்திரம் லட்சத்துக்கும் அதிகமான குரங்குகள் வசித்து வருகின்றனஎனகேகாலைமாவட்டசெயலகம் தெரிவித்துள்ளது என்று கூறினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## 'மன்னார் தீவை கடலுக்குள் அமிழ்த்தாதே': சுற்றுச்சூழலை காக்குமாறு போராட்டம்




மன்னாரில் இடம்பெற்று வருகின்ற சுற்றுச்சூழலை அழிக்கும் சட்ட விரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்;. மக்கள் நலமாக வாழ நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி மன்னாரில் நேற்று (வெள்ளிக்கிழமை)காலைமாபெரும்கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.









அத்தோடு, மன்னாரில் இடம்பெற்று வரும் பாரிய களிமண் அகழ்வு மற்றும் உயர்மின்வலு காற்றாடிகள் அமைக்கும் திட்டங்கள் காரணமாக மன்னார் தீவு மக்களது இருப்பில் பிரச்சினை, வாழ்வாதார பாதிப்பு, சட்டவிரோத காணி அபகரிப்பு, மரங்கள் அழிப்பு போன்றவற்றால் மன்னார் தீவு கடலுக்குள் அமிழப் போவதாகவும் இதன்போது போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தில் தொடங்கிய இந்த போராட்டம், சில மணிநேரங்கள் மாவட்ட செயலகத்தின் முன்னாலும் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்'மனித உயிர்களை காவு கொள்ளுகின்ற மண் அகழ்வு, காற்றாலை நடவடிக்கைக்கு காணிகளை விற்காதே', 'மண் அகழ்வை நிறுத்தாவிடில் நன்னீர் மாசடைவதுடன் உப்புத் தன்மையும் அதிகரிக்கும்', 'மன்னாரின் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம்' 'கனியவள மண் அகழ்வு மன்னார் மக்களின் வாழ்வாரத்தை அழித்துவிடும்' போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்த பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், வன்னி நாடாளுமன்றஉறுப்பினர்சார்ள்ஸ்நிர்மலநாதன், வடக்கு தெற்கு முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு, தெற்கு முக்கியஸ்தர்கள், இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற போராட்டக்காரர்கள், அங்கு மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் (காணி) ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்றை கையளித்தனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2024இல் வெளியிடப்பெற்றது.